


19.05.2025

தலைப்பு செய்திகள்

- நாட்டின் உணவு தானிய உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ் சிங் சவ்ஹான் கூறியுள்ளார்.
- நெதர்லாந்து, டென்மார்க், ஜெர்மனி நாடுகளுக்கு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் 6 நாள் அரசு முறை பயணமாக இன்று புறப்படுகிறார்.
- தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று உயர்நிலை ஆலோசனை மேற்கொண்டார்.
- தமிழ்நாட்டில் 7 ஆயிரம் ஏக்கர் ஆக்கிரமிப்பு கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.
- கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டு போட்டிகள் டையூவில் இன்று தொடங்குகிறது.

இனி விரிவான செய்திகள்

********

சிவ்ராஜ் சிங் சவ்ஹான்

நாட்டின் உணவு தானிய உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ் சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் சென்ற நிதியாண்டில் ஆயிரத்து 664 லட்சம் டன்னாக உற்பத்தி அதிகரித்தது என்றும்,

இது அதற்கு முந்தைய ஆண்டை காட்டிலும் 107 லட்சம் டன் அதிகம் என்றும் குறிப்பிட்டார்.

வேளாண் மேம்பாட்டு திட்டமான விக்சித் க்ரிஸி சங்கல்ப் இயக்கம் வரும் 29ஆம் தேதி தொடங்கப்பட்டு அடுத்த மாதம் 12ஆம் தேதிவரை நடைமுறையில் இருக்கும் என்றும் கூறினார்.

நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், புதிய விதை ரகங்கள் போன்றவை குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த பிரச்சாரம் மேற்கொள்ளப்படும் என்றார்.

நாடுமுழுவதும் 723 மாவட்டங்களில் உள்ள ஒன்றரை கோடி விவசாயிகள் பயன்பெறும் வகையில் இந்த பிரச்சார இயக்கம் முன்னெடுத்துச்செல்லப்படும் என்றார்.

இதற்காக விஞ்ஞானிகள் குழு 65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு நேரில் சென்று விவசாயிகளுக்கு பண்ணை தொழில்நுட்பம் குறித்து பயிற்சி அளிக்கும் என்று தெரிவித்தார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இதற்காக 3 கூட்டங்கள் தினசரி நடத்தப்படும் என்றும் கூறினார்.

நம் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான வேளாண்மை, 50 சதவிகித மக்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளதாகவும், நாட்டின் உணவு பாதுகாப்பிற்கு அடித்தளமாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க இந்த வேளாண் பிரச்சாரம் பெரிதளவு பயனளிக்கும் என்றார்.

********

ஜெய்சங்கர்

நெதர்லாந்து, டென்மார்க், ஜெர்மனி நாடுகளுக்கு 6 நாள் அரசு முறை பயணமாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இன்று செல்கிறார்.

இந்நாடுகளின் தலைவர்களை சந்திப்பதோடு வெளியுறவு அமைச்சர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகள், பரஸ்பர நலன் சார்ந்த பிராந்திய சர்வதேச பிரச்சனைகள் குறித்து விவாதிக்கிறார்.

ஐரோப்பிய நாடுகளுடன் வர்த்தகம், முதலீடு, நட்புறவு போன்றவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

********

பியூஷ்கோயல்

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் வளர்ச்சி அடைந்த பாரதம் பாதையில் மின்னணு பொது கொள்முதல் தளமான GEM அரசு சந்தை தளம் இன்றியமையா பங்களிப்பதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

ஆங்கில நாளிதழில் அவர் வெளியிட்டுள்ள கட்டுரையில், நுழைவு தடை, ஊழல் நடவடிக்கைகளை களைந்து, கிராமப்புறங்களில் உள்ள விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தி ஆளுமை வழங்கியதோடு, வரி செலுத்துவோரின் பணம் சேமிப்பிற்கும் வழிகோலுவதாக எடுத்துரைத்தார்.

********

விக்ரம் மிஸ்ரி

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான தற்போதைய வெளியுறவு கொள்கை முன்னேற்றங்கள் குறித்து வெளியுறவுத்துறை செயலர் திரு.விக்ரம் மிஸ்ரி நாடாளுமன்ற நிலைக்குழுவிடம் இன்றுமாலை விளக்கம் அளிக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சசிதரூர் தலைமையிலான இக்குழுவிடம் ஆபரேசன் சிந்தூர் தாக்குதல் மற்றும் அதனை தொடர்ந்து அறிவிக்கப்பட்ட சண்டை நிறுத்தம் குறித்தும் அவர் எடுத்துரைப்பார் என தெரிகிறது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு ஜம்மு காஷ்மீர் பகுதியில் இந்தியா மேற்கொண்ட தாக்குதல் தொடர்பான விவரங்களை மூத்த அரசு அலுவலர் நாடாளுமன்ற நிலைக்குழு முன்பு எடுத்துரைக்க இருப்பது இதுவே முதல் முறையாகும்.

********

கிரிக்கெட் வாரியம்

இந்தியா - பாகிஸ்தான் இடையே நிலவும் பதற்றத்தை தொடர்ந்து ஆசிய கிரிக்கெட் குழுவின் இரு போட்டிகளிலிருந்து விலக இந்திய கிரிக்கெட் வாரியம் முடிவு செய்துள்ளது.

இதன்படி இலங்கையில் அடுத்த மாதம் நடைபெற உள்ள மகளிர் ஆசிய கோப்பை போட்டிகள் மற்றும் வரும் செப்டம்பர் மாதம் இந்தியா நடத்த இருந்த ஆசிய ஆடவர் கோப்பை போட்டிகளிலிருந்து விலக தீர்மானித்துள்ளது.

இம்முடிவால் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், இலங்கை நாடுகளை உள்ளடக்கிய ஆடவர் ஆசிய கோப்பை போட்டியில் பின்னடைவு ஏற்படும் என தெரிகிறது.

இந்தியா விலகுவதால் வர்த்தக பரிவர்த்தனைகள் பாதிக்கப்படும் என்பதால் இந்த போட்டி நடைபெறுவது குறித்து கேள்வி எழுந்துள்ளது.

********

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்ள மாநில அரசு தயாராக உள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையில் பருவமழை முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனை கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், உயிரிழப்பு, பொருள் சேதங்கள் ஏற்படாத வகையில் அரசு அதிகாரிகள் செயலாற்றுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

மலைபகுதிகளில் மண் சரிவு இடங்கள் கண்டறியப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்,

அவசரகால செயல்பாட்டு மையம் 24 மணி நேரமும் செயல்படுவது உறுதி செய்யப்பட வேண்டும்,

பேரிடம் மீட்பு மையங்கள், தூய்மையுடனும் அடிப்படை வசதிகளுடனும் இருக்க வேண்டும்,

மின்சாரம் தகவல் தொழில்நுட்பம் அவசர கால மீட்பு வாகனங்களை தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்,

நெல் மூட்டைகள் நனைவதை தடுக்க போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்,

குறுவை சிறப்பு தொகுப்பு திட்ட பயன்கள் விவசாயிகளை சென்றடைவது உறுதி செய்ய வேண்டும் என்றார்.

கடைமடை பகுதிகளுக்கு நீர் செல்லும் வகையில் காவிரி நீர்வழிபாதை தூர்வாரப்பட வேண்டும்,

கொசு உற்பத்தியை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட அறிவுறுத்தல்களை முதலமைச்சர் அதிகாரிகளுக்கு வழங்கினார்.

வாய்ஸ்

இதனிடையே காவல்துறை சார்பில் 457 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள ஆயிரத்து 118 காவலர் குடியிருப்புகளுக்கு முதலமைச்சர் இன்று அடிக்கல் நாட்டினார்.

211 அரை கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கோவை மத்திய சிறைச்சாலைக்கும் அடிக்கல் நாட்டினார்.

அரசு ஊழியர்களுக்கு ஆயுள் மற்றும் விபத்து காப்பீடு உள்ளிட்ட வங்கி சலுகைகளை கட்டணமின்றி பெறுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 7 முன்னோடி வங்கிகளுடன் முதலமைச்சர் முன்னிலையில் இன்று கையெழுத்தானது.

********

சேகர்பாபு

தமிழ்நாட்டில் 7 ஆயிரம் ஏக்கர் ஆக்கிரமிப்பு கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 4 ஆண்டுகளில் 2 ஆயிரத்து 956 திருக்கோவில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளதாக கூறினார்.

8 திருக்கோவில்களில் இன்று குடமுழுக்கு நடைபெற்றதாக தெரிவித்தார்.

பாரிமுனையில் உள்ள காளிகாம்பாள் திருக்கோவில் திருப்பணிகளுக்காக ஒன்றரை கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

********

அர்ச்சனா பட்நாயக்

வாக்குச்சாவடி முகவர்களின் ஆலோசனைக்கூட்டம் மாநில தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர்.

தேர்தலுக்கான வாக்குச்சாவடி முதல்நிலை முகவர்களுக்கான பயிற்சி முகாம் வரும் 22, 23ஆம் தேதிகளில் டெல்லியில் நடைபெற உள்ள நிலையில் இதற்கான முன்னேற்பாடுகள் குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

********

பள்ளிகல்வித்துறை

தமிழ்நாட்டில் 10, 11ம் வகுப்பு துணைத்தேர்விற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என அரசு தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது.

வரும் ஜீலை மாதம் தேர்வுகள் நடைபெற உள்ள நிலையில், வரும் 22ம் தேதியிலிருந்து அடுத்த மாதம் 4ம் தேதி வரை இதற்கு விண்ணப்பிக்கலாம்.

தமிழ்நாட்டில் பள்ளிகல்வித்துறையில் பணியாற்றும் அமைச்சு பணியாளர்களுக்கு பணியிட மாறுதல் பதவி உயர்வு, கலந்தாய்வு வரும் 26ஆம் தேதி தொடங்கி ஜூன் 11ஆம் தேதிவரை இணையவழியில் நடைபெற உள்ளது.

********

மனோ தங்கராஜ்

கன்னியாகுமரி மாவட்டம் பூதபாண்டி அரசு மருத்துவமனையில் வளமிகு வட்டார வளர்ச்சி திட்டத்தின் கீழ் கர்ப்பிணி தாய்மார்களுக்கு மேம்படுத்தப்பட்ட வசதிகளை மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு.மனோ தங்கராஜ் இன்று துவக்கிவைத்தார்.

ஆட்சித்தலைவர் திருமதி அழகுமீனா உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

********

நாமக்கல்

நாமக்கல் மாவட்டத்தில் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதர்வு தொகை இதுவரை பெறாத பயனாளிகள் உரிய ஆவணங்களோடு மாவட்ட சமூக நல அலுவலரை தொடர்பு கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் டாக்டர் உமா அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

********

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் கனமழை காரணமாக 500 ஏக்கருக்கு மேல் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

********

அரியலூர்

அரியலூரையும் - கடலூரையும் இணைக்கும் வெள்ளாற்று மேம்பாலத்தை ஒட்டியுள்ள தற்காலிக அணுகு சாலை மழைநீரில் அடித்து செல்லப்பட்டதால் 10க்கும் மேற்பட்ட கிராம மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது அரியலூர் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

********

இருவரி

தூத்துக்குடி மாவட்டத்தில் மாணாக்கரின் உயர்கல்வி வழிகாட்டுதலுக்காக 24 மணி நேரமும் செயல்படும் 20 பேர் கொண்ட குழு அமைக்கப்படும் என்று ஆட்சித்தலைவர் திரு.இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் இன்று நடைபெற்ற பிளஸ் டூ மாணாக்கருக்கான வழிகாட்டு நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் இந்த வாய்ப்பை மாணாக்கர் பயன்படுத்திக்கொள்ள ஆசிரியர்கள் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாப்பு அறையை ஆட்சித்தலைவர் டாக்டர் உமா அனைத்து கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று ஆய்வு செய்தார்.

ஈரோடு மாவட்டம் சிவகிரியில் அண்மையில் வயதான தம்பதியினர் கொலையான வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்ட நான்கு பேரும் வரும் 2ஆம் தேதிவரை நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சென்ற நவம்பர் மாதம் திருப்பூர் பல்லடம் கொலை வழக்கிலும் தொடர்புடையவர்கள் என தெரியவந்துள்ளதாக மேற்கு மண்டல காவல்துறை தலைவர் திரு.செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் வேளாண் துறை மூலம் உயிர்ம சான்று பதிவு புதுப்பித்தல் பணிகள் நடைபெற்று வருவதால் விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திருமதி.ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

********

வானிலை

வளிமண்டல சுழற்சி காரணமாக நீலகிரி, கோவை, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், மதுரை, தேனி, திண்டுக்கல், தென்காசி, திருப்பூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, நாமக்கல் திருப்பத்தூர் வேலூர் ராணிப்பேட்டை மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று கன மழை பெய்துள்ளது.

********

கேலோ

கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டு போட்டிகள் டையூவில் இன்று தொடங்குகிறது.

வரும் சனிக்கிழமை வரை நடைபெறும் இப்போட்டிகளில் நாடுமுழுவதிலுமிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்கின்றனர்.

கால்பந்து, கைபந்து, கபடி, நீச்சல் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற உள்ளன.

********

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் லக்னோவில் இன்று இரவு ஏழரை மணிக்கு லக்னோ சூப்பர் ஜெயன்ஸ் - சன்ரைசர்ஸ் ஹைதராபாத்தை எதிர்கொள்கிறது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

********